**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.**

<u>அசல் வழக்கு எண் 122/2017</u>

நாள் 7.03.2023

<u>பெயர். அசோக்குமார் த/பெ. பரசுராமன்</u>

<u>வா.சா.1 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

1. என் தாத்தா பெயர் பூங்காவனம் ஆகும். என் தாத்தா பூங்காவனத்தின் தந்தையார் பெயர் எனக்கு தெரியாது. என் தாத்தா பூங்காவனத்திற்கு தாண்டவமூர்த்தி, பரசுராமன் மற்றும் ஆறுமுகம் என மூன்று மகன்கள் ஆகும். என் தாத்தா உடன் பிறந்தவர்கள் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. என் தாத்தாவிற்கு உடன் பிறந்தவர்கள் சுப்பிரமணி மற்றும் விநாயகம் ஆகியோர் என்றால் சரிதான். இதில் பூங்காவனம் மூத்தவர், அதற்கு அடுத்தது சுப்பிரமணி அதற்கு அடுத்தது விநாயகம் என்றால் சரிதான்.

2. மேற்படி சுப்பிரமணியின் மனைவி பெயர் கன்னியம்மாள் என்றால் சரிதான். விநாயகத்தின் மனைவி பெயர் ரமணி அம்மாள் என்றால் சரிதான். மேற்படி ரமணி அம்மாளுக்கு கலா, செல்வி, மற்றும் பிரதிவாதியான பரமேஸ்வரி ஆகிய மூன்று பெண் பிள்ளைகள் என்றால் சரிதான். சுப்பிரமணி மற்றும் விநாயகம் ஆகியோர் பூங்காவனத்திற்கு முன்பே இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பூங்காவனத்தின் தந்தை பூங்காவனத்தின் சிறுவயதிலேயே இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

3. பூங்காவனத்தையும் மற்றும் அவர்களது சகோதரர்களையும் அவரது தாயார் ருக்மணி அம்மாள் வளர்த்தார்கள் என்றால் சரிதான். பூங்காவனத்தின் தந்தைக்கு நிலங்கள் இவ்வழக்கு சொத்து மற்றும் வீட்டு மனைகள் இருந்தது என்றால் சரியல்ல. குன்னத்தூரில் ஒரு வீடு மட்டும் தான் இருக்கிறது. பூங்காவனத்தின் தந்தை, பூங்காவனம் மற்றம் இரு சகோதரர்களும் சேர்ந்து நிலங்களை விற்று விட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு சொத்தும் மற்றும் வீட்டு மனையும் மட்டும் தான் இருக்கிறது என்றால் சரியல்ல வீடு மட்டும் தான் இருக்கிறது.

4. மேற்படி பூங்காவனத்தின் தந்தைக்கு ஓட்டு வீடு மட்டும் தான் இருந்தது. மேற்படி ஓட்டு வீட்டைம பூகாவனம் சுப்பிரமணி மற்றும விநாயகம் ஆகயோர் ம

பிரித்து கொண்டார்கள் என்றால் பிரித்து கொண்டார்கள். ஓட்டு வீட்டை பாகம் பரிக்கும் போது இடிந்த நிலையில் இருந்ததா அல்லது நல்ல நிலையில் இருந்ததா என்றால் நல்ல நிலையில் தான் இருந்தது. நான் கூறுவது போல் பாகம்`பிரிக்கும் ஓட்டு வீடு இடிந்த நிலையில் தான் இருந்தது என்றாலும நல்ல நிலையில் இல்லை என்றாலும் சரியல்ல. பாகம் பிரிப்பதற்கு முன்பாக பூங்காவனம் சுப்பிரமணி மற்றும் விநாயகம் அந்த ஓட்டுவீட்டில் தான் குடியிருந்தார்கள் என்றால் சரிதான்.

5. மேற்படி ஓட்டு வீட்டில் பூங்காவனம் சுப்பிரமணி மற்றும் விநாயகம் ஆகியோருக்கு திருமணம் ஆகி தனிதனியாக குடும்ப மாக இருந்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு 3 நபர்களும் ஒன்றாக இருந்தபோது வழக்கு சொத்தில் அவரவர்கள் குப்பைகளை கொட்டி வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல.

6. அவ்வாறு ஓட்டு வீட்டை பாகம் பிரித்து விட்ட பிறகு தனிதனியாக பட்டா பெற்று விட்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு பாகம் பிரிக்கப்ப்ட்ட பிறகு பழைய சர்வே எண்.151 புதிய சர்வே எண் 340/32 பட்டா எண் 339 என் தந்தைக்கு வந்தது என்றால் சரிதான். அவ்வாறு பாகம் பிரிக்கப்பட்ட பிறகு ரமணி அம்மாளுக்கு பழைய சர்வே எண் 151 புதிய சர்வே எண் 340/33 என பட்டா எண் 455 என ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

7. கன்னியம்மாள் சுப்பிரமணியின் மனைவி என்றால் சரிதான். கன்னியம்மாளுக்கு பழைய சர்வே எண் 151 புதிய சர்வே எண் 340/34 பட்டா எண் 111 என பாக பிரிவினையில் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். குப்பை கொட்டி வைத்ததாக சொல்லப்படும் இடத்தின் பழைய சர்வே எண் 151 புதிய சர்வே எண் 340/35 என்றால் சரிதான். அதன் பட்டா எண்.576 ஆகும். மேற்படி பட்டா எண் 576 என்பது 7.6.2010ல் என் தந்தை பரசுராமன் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படிம பட்டா எண் 576ன் பழைய பட்டா எண்.684 என்றால் என் தந்தைக்கு தான் தெரியும். பழைய பட்டா எண் 576 தான்.

8. பட்டா எண் 576 என் பழைய பட்டா எண் 684 பரசுராமன் மற்றும் இருவர் பெயரில் வந்துள்ளது என்றால் என் தந்தைக்கு தான் தெரியும். பட்டா எண் 684லிலருந்து பட்டா எண் 576 என எவ்வாறு மாறியது என எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவ்வாறு பரசுராமன் மற்றும் இருவர் என்ற பெயரில் இருந்ததை இருவர் பெயரை எவ்வாறு நீக்கினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

9. பட்டா எண் 684 ஆனது பரசுராமன், மற்றும் ரமணி மற்றும் கன்னியம்மாள் ஆகியோா் பெயரில் கூட்டாக வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பட்டா எண் 684லில் மேற்சொன்ன ஓட்டு வீடு இருந்தபோது குப்பை கொட்டி வந்ததால் உரிமம் ஏற்பட்டு 3 நபா்களுக்கும் கூட்டாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி ரமணி மற்றும் கன்னியம்மாள் ஆகியோா் வழக்கு சொத்தை பொறுத்து கிரயம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

10. நாங்கள் தவறான முறையில் பட்டா எண் 684ஐ திருத்தம் செய்து பட்டா எண் 576 என பட்டா வாங்கி கொண்டோம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து என்ன சா்வே எண் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பட்டா எண் 576ன் நீளம் கிழக்கு மேற்கு 33 அடி வடக்கு தெற்கு 27 அடி என்றால் சரிதான். பட்டா எண் 684ன் கிழக்கு மேற்கு நீளம் 33 அடி என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பாகம் வாய்மொழீயாக பிரித்து கொண்டாா்களா அல்லது எழுத்த மூலமாக பிரித்து கொண்டாா்களா என்றால் என் அப்பாவிற்கு தான் தெரியும்.

11. மேற்படி வழக்கு சொத்து என் தந்தைக்கு பாகமாக வந்தது என்பதை காண்பிக்க பட்டாவை தவிா்த்து வேறு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா மற்றும் சிட்டா தாக்கல் செய்துள்ளேன். பட்டா எண் 684ல் கிழக்கு மேற்கு தலா 11 அடியும் வடக்கு தெற்கு தலா 9 அடியும் மேற்படி பூங்காவனத்திற்கும் மற்றும் அவா் உடன் பிறந்தவருக்கும் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து ரோட்டின் காா்னா் பிளாட் என்றால் சரிதான், பிரதிவாதிக்கு உரிமை இல்லை.

12. மேற்படி காா்னா் பிளாட்டை ரமணி அம்மாளுக்கு ரோட்டுக்கு மேற்கேயும் வடக்கேயும், ஐக்பந்தியாக கூறியும் கன்னியம்மாளுக்கு ரோட்டிற்கு கிழக்கே மற்றும் தெற்குமாக ஐக்பந்தியாக கூறி பாகத்தில் ஒதுக்கப்பட்டு அனுபவித்து வருகிறது என்றால் சரியல்ல. மேற்படி ரமணிஅம்மாளுக்கு மேற்கு புறம்ம கன்னியம்மாளுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் ரமணி அம்மாளுக்கு 3ஆவது வீடு பக்கத்தில் இருப்பது எனது காலிமனை ஆகும்.

13. கன்னியம்மாளுக்கு ஒதுக்ப்பட்டட இடத்திற்கு மேற்கு புறம் என் தந்தை வீடு கட்டி கொண்டிருக்கிறாா் என்றால் சரிதான். என் தந்தை வீடு கட்டி உள்ள இடத்தின் புதிய சா்வே எண் 340/32 என்றால் சரிதான். மேற்படி வீடு பிரிக்கப்பட்டத்தில் என் தந்தைக்கு வந்த பாகத்தையும் தாவாசொத்தில் என் தந்தையின் பாகத்தையும்

சேர்த்து வீடு கட்டி உள்ளார்கள் என்றால் சரியல்ல. என் தந்தைக்கு வழக்கு சொத்தை கிரயம் கொடுக்க எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு கிரயம் கொடுத்தது செல்லாது என்றாலும் அதன் அடிப்படையில் நான் பட்டாவை மாற்றி கொண்டதும் செல்லாது என்றால் சரியல்ல.

14. கலா மற்றும் செல்வி ஆகியோர் பிரதிவாதிக்கு 13.2.2009ம் தேதி அன்று ஆவண எண் 1214/9 படி கிரயம் கொடுத்து சுவாதீனம் ஒப்படைத்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தின் பரசுராமன் த/பெ. பூங்காவனம் என கையொப்பம் செய்யபட்டுள்ளது என்றால சாட்சி முதலில் சரிதான் என ஒப்பு கொண்டு பிறகு என் தந்தை கையொப்பம் செய்தாரா என்று தனக்கு தெரியாது என மறுத்து சாட்சியம் அளிக்கிறாா். என் தந்தை பத்தாம் வகுப்பு வரை படித்துளாா். என் தந்தை தமிழில் கையொப்பம் செய்யமாட்டாா். நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன் நான் தமிழில் தான் கையொப்பம் செய்வேன். நான் என் தந்தையின் கையொப்பத்தை மாற்றி சொல்ல வேண்டும் என்பதற்காக ஆங்கியலத்தில் கையொப்பம் செய்வாா் என மாற்றி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

15. மேற்படி ரமணி அம்மாளின் பாகத்தை கலா மற்றும் செல்வியிடம் இரந்து பிரதிவாதிக்கு வாங்கி தர என் தந்தை முன்னின்று ஏற்பாடு செய்து மேற்படி கிரய பத்திரத்தின் மூலம் வாங்கி கொடுத்தாா் என்றால் சரியல்ல. மேற்படி கிரய பத்திரத்தில் அவா் தான் சா்ட்சி கையொப்பம் செய்தாா் என்றால் சரியல்ல. மேற்படி தாவா இடத்தில் தகர சீட் போட்டு பிரதிவாதி டீ கடை நடத்தி வந்தாா் என்றால் சரியல்ல, என் தந்தை தான் என் தாத்தா காலத்தில் இருந்து டீ கடை நடத்தி வந்தாா். மேற்படி டீ கடையை கன்னியம்மாளின் மகளான மலருக்கு வாடகை விட்டிருந்தாா் என்றால் சாயில்ல.

16. மேற்படி மலரின் கடையில் இருந்து காலி செய்ய வேண்டும் என்பதற்காக போலீசில் புகாா் கொடுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டு மலரை காலி செய்து சுவாதீனம் பிரதிவாதியிடம் ஒப்படைத்துவிட்டாா்கள் என்றால் சரியல்ல. தகர சீட்டை எடுத்து கொண்டு பிரதவாதி கட்டிடம் கட்டலாம் என்று முயற்சி செய்தபோது நான் பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல அவாகள் தான் பிரச்சனை செய்தாா்கள். மேற்படி பட்டா எண் 684ஐ தவறான முறையில் அடித்து விட்டு பட்டா எண் 576 என போலியாக வாங்கி உள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி பட்டா எண் 576ன்படி வா.சா.ஆ.1 கிரய பத்திரம் அவசரஅவசரமாக எழுதி அவசர அவசரமாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

17. நான் பிரதிவாதியை வழக்கில் சொத்தில் இருந்து காலி செய்ய வேண்டும் என்று பலமுறை காவல் துறையில புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி புகாரானது வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவும் வழக்கு தாக்கல் செய்துவிட்டு பின்பாகவும் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி ரமணி அம்மாளின் பாகத்தை பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் மற்றவர்களின் பாகத்தை பொறுத்து பிரதிவாதிக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்றாலும் சாயில்ல, என் தாத்தா அதன் பின்னிட்டு என் தந்தை ஆகியோர் அனுபவித்து வந்ததால் எங்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது.

18. மேற்படி பட்டா எண் 576 நில ஒப்படைப்பு அடிப்படையில் கொடுக்கப்படவில்லை என்றால் முறைப்படி தான் கொடுத்தார்கள். மேற்படி பட்டாவின் மூலமாக எந்தவித உரிமை மூலம் எற்படாது என்றால் சரியல்ல. உரிமம் மூலம் இல்லாமல் விளம்புகை பரிகாரம் கோருவது நிலைக்கதக்கல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கு தள்ளபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல
என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால்
திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால்
சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால்
சாட்சியின் கையெழுத்து.கைரேகை பெறப்பட்டது.

(ஒம்) பொ.தி. சதீஷ்குமார்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஆரணி.